# 1.2 நேர்மையே நிறைவு தரும்



ரவி மற்றும் குமார் இருவரும் பள்ளிக்கூடம் முடிந்த பின்பு தங்கள் வீடு நோக்கி செல்லத் தொடங்கினர். வீதியோரமாக நடந்து செல்லுகையில், வழியில் எவரோ கைத்தவறுதலாக விட்டுச் சென்ற ஓர் தினக்குறிப்புப் புத்தகம் கிடப்பதைப் கண்டனர்.

ரவி :- எவரோ ஒருவர் தனது தினக்குறிப்புப் புத்தகத்தைத் தவறுதலாகக் கீழே போட்டுச் சென்றுள்ளார். எடுத்துப் பார்ப்போமா?

குமார் :- கீழே கிடக்கும் பொதிகளைக் கையிலெடுக்க வேண்டாமென எங்கள் வீட்டில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இது ஓர் தினக்குறிப்புப் புத்தகம் மட்டுமே; எடுத்துப் பார்ப்போம்.

ரவி :- குமார்! இதோ பார், முகவரி இருக்கிறது. இங்கே பார், அறிமுக அட்டையும் இருக்கிறது.

குமார் :- ரவி! முகப்பு அட்டைக்குள் ஏதோ பணம் இருப்பது தெரிகிறது.

ரவி :- ஆமாம், ஆமாம், ஐநூறு ரூபாய் முழுத்தாள் இருக்கிறது!

குமார் :- இப்பொழுது என்ன செய்வது?

இவர்கள் இருவரும் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது, அவர்கள் அருகே இன்னொரு மனிதர் நெருங்கி வருவதைக் கண்டனர்.

மனிதர் :- என்ன பிள்ளைகளே, தினக்குறிப்புப் புத்தகம், பணம் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு தடுமாறுகிறீர்கள். அவை என்னுடையவைதான். நான்தான் கீழே தவறவிட்டு விட்டேன். அதைத் தேடியே வந்தேன். என்னிடம் தந்து விடுங்கள்.

குமார் :- இல்லை, இல்லை. நாங்கள் நம்ப மாட்டோம். உங்கள் பெயரைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லும் பெயர் இக்குறிப்புப் புத்தகத்தில் இருந்தால் தந்து விடுகிறோம்.

இதைக் கேட்டவுடன் அந்த மனிதர் தயங்கியவராக அவ்விடத்தை விட்டு அகன்று செல்லத் தொடங்கினார். சிறுவர் இருவரும் அடுத்து என்ன செய்வதென எண்ணினர்.

ரவி :- குமார்! நாம் வந்த வழியே திரும்பிச் சென்று, நமது பள்ளியின் முதல்வரிடமே இவற்றைக் கொடுத்து விடுவோம். சரிதானே?

குமார் :- அதுவே சரியான முடிவு; வா போகலாம்.

இருவரும் தங்கள் பள்ளியின் முதல்வர் அறைக்குள் சென்றனர். அங்கே முதல்வர் இன்னும் அமர்ந்து இருந்தார். இருவரையும் கண்டவுடன் வியப்புடன் அவர்களைப் பார்த்தார்.

முதல்வர் :- என்ன பிள்ளைகளே, இருவரும் பள்ளியிலிருந்து வெளியேறுவதைக் கண்டேன். ஏன் மீண்டும் வந்தீர்கள்?

குமார் :- ஐயா, நாங்கள் வழியில் ஓர் தினக்குறிப்புப் புத்தகத்தைக் கண்டு எடுத்தோம்.

ரவி :- ஐயா, அதில் அறிமுக அட்டையும் மற்றும் ஐநூறு ரூபாய் பணமும் இருக்கிறது. தினக்குறிப்பிலும் முகவரி எழுதப்பட்டுள்ளது.


முதல்வர் அவர்களைப் பாராட்டினார். சிறு வயதிலேயே அவர்களிடம் காணப்பட்ட நேர்மை அவருக்குப் பெருமையாய் இருந்தது. ஓர் தந்தி கொடுத்து உரிமையாளரை வரவழைக்க முடிவெடுத்தார். இரு நாட்கள் கழித்து உடமைகளின் உரிமையாளர் வந்தார். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார்; முதல்வரிடம் இருந்து தனது உடமைகளைப் பெற்றுக் கொண்டார். பொருட்களைக் கண்டெடுத்த மாணவர்களைச் சந்திக்க விரும்பினார். முதல்வர் இரு மாணவரையும் வரவழைத்தார்.

ஆசிரியர் :- அன்பான பிள்ளைகளே, இச்சிறு வயதிலேயே உங்களிடம் காணப்படும் நேர்மை மற்றும் தொண்டுணர்வைப் பாராட்டுகிறேன். பிறர் பொருள் மீது நாட்டம் கொள்ளாத உங்கள் முன்மாதிரி சிறப்பானது.

மாணவர்களே, இதுபோன்ற செயல்களை நீங்களும் அறிந்து இருப்பீர்கள். இதற்கு நேர்மாறான செயல்களையும் கண்டிருப்பீர்கள். எனவே நல்லவை, தீயவை ஆகியன தொடர்பாகத் தெளிவான முடிவெடுப்பது நமது கடப்பாடு ஆகும்.

வாய்மை பொய்மை ஆகியனவற்றை இனம் காண்பது எளிதன்று. இவற்றுடன் மூட நம்பிக்கையும் இணைந்துச் செயல்பட வாய்ப்பு உண்டு. போலியானவை அசல் போன்ற தோற்றத்தைத் தருவதுமுண்டு. நமது பெற்றோர் மற்றும் பெரியோர் அறிவுரை கூறுவதன் நோக்கம், நாம் நல்வழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதனாலேயாகும். **இவ்விதம் நேரிய வழியைத் தெரிவு செய்வதன் மூலமே கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவ முடியும்.**

இஸ்ரயேல் மக்கள் அடிமை வாழ்வில் இருந்து நீங்கி மோசே தலைமையில் பாலை நிலத்திற்கூடாகச் செல்லுகையில், கடவுள் நீதிச்சட்டத்தை வழங்கினார். பத்துக்கட்டளை இஸ்ரயேலர் வாழ்வில் சிறப்பிடம் வகித்தமை உங்களுக்குத் தெரியும். இவற்றின் மூலம் இஸ்ரயேலுக்கு நேரிய வழியைக் காண்பிப்பதே கடவுளின் நோக்கமாகும். இதைக் குறித்து எசாயா தீர்க்கர் (இறைவாக்கினர்) இவ்விதம் கூறுகிறார்.



**என் மக்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்: என் இனமே, எனக்குச் செவிகொடு: ஏனெனில் திருச்சட்டம் என்னிடமிருந்து புறப்பட்டுச் செல்லும் என் நீதி மக்களினங்களுக்கு ஒளியாகத் திகழும். (எசாயா 51:4)**

இஸ்ரயேல் இனம் பன்னிரு கோத்திரம் கொண்ட சேர்க்கையாகும். வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறிய இஸ்ரயேலர் நேரிய வழியில் நடத்தப்படுவதற்கு **நீதிச்சட்டம்** பேருதவியாய் அமைந்தது. இருப்பினும் இடையிடையே வழி தவறி நடக்கவும் தலைப்பட்டனர். நீதிச்சட்டத்தைக் கைவிட்டு படைப்புகளுக்கு இறைத்தன்மை கொடுத்து வாழ முற்பட்டனர். நாட்டின் அரசர் உட்பட்ட ஆட்சியினர் அறமில்லா வழியில் நாட்டை வழி நடத்த முயன்றனர். சமயத் தலைவர் பிழையான செயல்களை மூடி மறைக்க முயன்றனர். மனுக்குலம் மீது மாறா அன்பும் இரக்கமும் கொண்ட கடவுள் இவர்களை நல்வழிப்படுத்த முயன்றார். இதற்கென அழைக்கப்பட்டவர்கள் ‘இறைவாக்கினர்’ (தீர்க்கர்) எனப்பட்டனர்.

**இறைவாக்கினர்** ‘கடவுளின் வாய்’ என அழைக்கப்பட்டனர். இவர்கள் கடவுள் வழியை நன்குணர்ந்து, அதற்கேற்ப மக்களுக்கு இறை வாக்கைக் கொண்டு வந்தனர். ஓரிறை (ஒரே கடவுள்) கோட்பாடு கொண்ட தீர்க்கர் மிகவும் துணிவுடன் செயல்பட்டனர். மக்களை இறை விருப்பம் சார்ந்து வாழத்தூண்டுதல், நேரிய வழியில் மக்களை நடத்துதல், எதிர்வு கூறல், கடவுளின்



இலவச விநியோகத்திற்காக

நடுத்தீர்வை அறிவித்தல் என துணிவுடனும் தெளிவுடனும் செயல்பட்டனர். தீர்க்கர், தங்கள் வாழ்வு மற்றும் தங்களுக்கிருந்த மரண அச்சுறுத்தல் போன்றவற்றைப் பெரிதெனக் கருதாது செயல்பட்டனர். மக்களை மனந்திரும்ப அழைத்தனர். மனந்திரும்புதல் என்பது நேரிய வழி செல்வது, நேர்மையாய் முடிவெடுத்துச் செயல்படுவது போன்ற வழி வகைகளாகும்.

**ஆய்வு செய்யவும்**

*1 தவறான வழி நடந்த இஸ்ரயேலரை நேர் வழி நடத்த முயன்ற பழைய ஏற்பாட்டின் இரு தீர்க்கர்களை ஆராய்க.*

*2. புதிய ஏற்பாட்டில் யோவான் திருமுழுக்கினர் ஓர் தீர்க்கர் போன்று யூத மக்களுக்கு ஆற்றிய அறவுரையை ஆய்வு செய்யவும்.*

இஸ்ரயேல் மக்களுக்குத் தலைமைத்துவம் வழங்கிய தாவீது அரசரை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அவர் அரசராய்த் திருப்பொழிவு பெறுவதற்கு முன்பு ஓர் மேய்ப்பராய் இருந்த பொழுதும், இறைப்பற்று மிகுந்தவராய் இருந்தார்.

தாவீது இறை விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்தார் என்னும் குறிப்பு திருவிவிலியத்தில் காணப்படுகின்றது.

**தாவீது அரசர் ஆட்சி தொடர்பான தகவல்களை திருவிவிலியத்தில் தேடுங்கள்.**

அந்நாட்களில் நடைமுறையில் காணப்பட்ட அரசியல் சூழலில், அரசர் ஒருவர் பலதார மணம் புரியும் வழக்கம் இருந்தது. அயல் நாட்டவருடன் நல்லுறவு மற்றும் அமைதி பேண அந்நாட்டு அரச குமாரிகளை மணம் புரியும் நடைமுறை வழக்கில் இருந்தது. எனினும் தாவீது உரியாவின் மனைவி பத்சேபாவை உரிமை கொள்ள முயன்றமை ஏற்புடையதன்று. கடவுளை சார்ந்து மக்கள் மீது அன்பு கொண்டு ஆட்சி புரிந்த இவ் அரசர், தனக்கேற்பட்ட சோதனையில் வீழ்ந்து போனார். இச்செயல் கடவுள் வழங்கிய கட்டளைகளை மீறும் செயலாய் அமைந்தது. தனக்கு நிகழ்வதைப் புரிந்து கொள்ள முடியாத தடுமாற்றமே சோதனையின் அதியுச்சமாகும். தாவீது அரசரின் இச்செயல் கடவுளின் கண்டனத்திற்கு ஆளானது.


தாவீது அரசர்

தாவீது அரசர் நல்வழி அடைய, கடவுள் சார்பாக இறைவாக்கினர் நாத்தான் முன்வந்தார். அவர் மிகவும் புத்தி கூர்மையுடன் செயல்பட்டார். தீர்க்கர் கூறிய உருவகக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த தாவீது, கதையில் வரும் குற்றவாளியை நடுத்தீர்வு செய்தார். தனது தீர்க்கர் மூலம் பக்கச் சார்பின்றி நீதியான தீர்வை முன்வைத்தமை மூலம் கடவுளின் நீதி வெளிப்படுத்தப்பட்டது (2 சாமுவேல் அதி. 11,12).

தாவீது அரசரும் மனமுடைந்தவராய் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். தனது தவறை ஏற்ற அரசர் ''என்னில் தூய்மையான உள்ளத்தை ஏற்படுத்தியருளும் '' என வேண்டினார். (திருப்பாடல்கள் 51)

மக்களைப் பாதுகாக்கவும் நல்வழி படுத்தவும் பதவியில் அமர்ந்துள்ள தலைவர்கள், தமக்கு மேல் உன்னதமான ஓர் கடவுள் இருக்கிறார் என்பதை உணரத் தலைப்படுதல் வேண்டும். இவர்கள் நீதி நிறைந்த தலைமைத் துவத்திற்கூடாக குடிமக்களை வழி நடத்திச் செல்லவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். குடிமக்கள் நடுவில் திறமை மிக்கவர், பேர் பெற்றவர் எனத் திகழ்வது மட்டுமல்லாது, நேர் வழியைத் தேர்ந்து வழி நடத்துபவராகவும் இருத்தல் வேண்டும். நிதானமிக்கோராகவும், பொறுப்பு வாய்ந்தோராகவும், மக்கள் சார்பாகச் செயல்படுவோராகவும் இருத்தல் வேண்டும்.

நீங்கள் எதிர்காலத்தில் தலைமைப் பொறுப்பேற்கும் பொருட்டு, கடவுளின் கருவியாகச் செயல்பட இள வயதிலிருந்தே தெரிவு செய்யப்பட்ட ஒருவராய் இருக்கலாம். மக்கள் தலைவராய், திரு அவைத் தலைவராய் அல்லது மருத்துவர், வழக்கறிஞர், ஆசிரியர் அல்லது நவீன வசதிகளைக் கையாளும் ஓர் விவசாயியாக உயர்வான ஓர் பணியாற்ற இன்னும் சில ஆண்டுகளில் உங்களுக்கு வாய்ப்பு கிட்டலாம்.

நாத்தான் தீர்க்கர் போன்று தீது செய்வோரை நல்வழிப்படுத்தும் பணி உமக்குக் கிட்டலாம். உங்களை நல்வழி நடத்த முயலும் உங்கள் பெற்றோர், ஆசிரியர், பெரியோர் ஆகியோருக்கு நன்றி உணர்வு உள்ளோராய்த் திகழுங்கள். அவர்களின் நல்வழி சார்ந்த அறிவுரைக்குச் செவிகொடுங்கள்.

தற்காலக் கிறிஸ்தவ அடியவருக்கு நல்வழி காட்ட இயேசு கிறிஸ்துவின் வழியைத் தேர்வு செய்தல் வேண்டும். அதேபோன்று திருவிவிலிய உண்மைகளும் நம்மை நேர் வழிப்படுத்தும். ஆண்டவரே மொழிந்த திருவார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.



*இலவச விநியோகத்திற்காக*



ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.

(மாற்கு 10:45)

அவரைச் சாரும் பொழுது, நாம் பிழையற்ற நேரிய வழியைத் தேர்ந்து, கடவுளின் படைப்புகளின் வளர்ச்சிக்கு உதவக்கூடும்.

**செயல்பாடு**

1. *உமது நண்பர் ஒருவர் இழைத்த ஓர் தவறைத் திருத்திக் கொள்வதற்கு நீர் எடுக்கக் கூடிய நடைமுறை யாவை?*

2. *இஸ்ரயேல் நாட்டின் தீர்க்கர்கள் செயல்பட்ட ஐந்து சூழல்களை விபரிக்கவும்.*

3. *நமது நாட்டின் நிலைப்பாடுளை நேர்வழிப்படுத்த தீர்க்கர் பணி எவ்வாறு பயன்படும் என்பதை விளக்கவும்.*